குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 127/2022

அ.சா. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.ராஜேந்திரன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.பாப்பையன் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 35 |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 05.12.2023**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

**1)** நான் சம்பல் பள்ளத்தில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன நாகராஜன் எனது சகோதரர் ஆவர். கடந்த 21.01.2021-ம் தேதி என்னுடைய சகோதரர் நாகராஜன் ஆஜர் எதிரியுடன் இருசக்கர வாகனத்தில் சென்றபோது, மேலுமலை கணவாய் அருகே விபத்து நடந்து எனது சகோரதரர் நாகராஜன் மற்றும் வெங்கடேஷ் என்பவரையும் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாக நான் வீட்டில் இருந்தபோது, எனது நண்பர் ஒருவர் கைபேசி மூலம் தகவல் சொன்னார். மேற்படி தகவலின் பேரில் நான் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். நான் பார்த்தபொழுது எனது சகோரதரர் நாகராஜன் தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டு இருந்தது. ஆஜர் எதிரிக்கு வலது கையில் காயம் ஏற்பட்டிருந்தது. அதன்பிறகு மேல்சிகிச்சைக்காக பெங்களூர் மசூம்தாசா மருத்துவமனையில்சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார்.

2) அங்கு 21.01.2021-ம் தேதியிலிருந்து 27.01.2021-ம் வரை சிகிச்சையில் இருந்து, பின்பு சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்துவிட்டார். மேற்படி வழக்கு இந்த விபத்து குறித்து சூளகிரி காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுதான் நான் சூளகிரி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் ஆகும். மேற்படி புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். (மேற்படி புகார் மனு அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**).** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

முதல் விசாரணை முடிக்கப்படுகிறது**.**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை **:**

**1)** வழக்கு விபத்து சம்பவத்தினை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆகவே யாருடைய அஜாக்கிரதையினால் வழக்கு விபத்து சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து வெற்றுத்தாளில்தான் என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ.1- புகார் மனுவில் என்ன விவரம் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது**.**

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு
சரியென ஒப்புக்கொண்டார்.

ஒம்/வ.அகவிதன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1
ஓசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 127/2022

அ.சா. **2**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி.சரஸ்வதி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.நாகராஜன் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 30 |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 05.12.2023**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

**1)** நான் தற்போது உலகம் கிராமத்தில் உள்ள எனது தாயாரின் வீட்டில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன நாகராஜன் எனது கணவர் ஆவர். கடந்த 21.01.2021-ம் தேதி என்னுடைய கணவர் நாகராஜன் ஆஜர் எதிரியுடன் இருசக்கர வாகனத்தில் சென்றார். ஆஜர் இருசக்கர வாகனத்தை ஓட்ட எனது கணவர் பின்னால் அமர்ந்து சென்றபோது, மேலுமலை கணவாய் அருகே இரவு 7 மணிக்கு விபத்து நடந்து எனது கணவர் நாகராஜன் மற்றும் வெங்கடேஷ் என்பவரையும் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாக நான் வீட்டில் இருந்தபோது, இரவு 07.15 மணிக்கு அ.சா.1 கைபேசி மூலம் தகவல் சொன்னார். மேற்படி தகவலின் பேரில் நான் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். நான் பார்த்தபொழுது எனது கணவர் நாகராஜன் தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டு இருந்தது. ஆஜர் எதிரிக்கு வலது கையில் காயம் ஏற்பட்டிருந்தது. அதன்பிறகு மேல்சிகிச்சைக்காக

பெங்களூர் மசூம்தாசா மருத்துவமனையில்சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார்.

2) அங்கு 21.01.2021-ம் தேதியிலிருந்து 27.01.2021-ம் வரை சிகிச்சையில் இருந்து, பின்பு சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்துவிட்டார். மேற்படி வழக்கு இந்த விபத்து குறித்து சூளகிரி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

**1)** வழக்கு விபத்து சம்பவத்தினை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தின் போது வழக்கு விபத்து சம்பவத்தில் தொடர்புடைய வாகனத்தினை எதிரி இயக்கிநாரா அல்லது எனது கணவர் இயக்கிநாரா என்று எனக்கு தெரியாது. ஆகவே யாருடைய அஜாக்கிரதையினால் வழக்கு விபத்து சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து வெற்றுத்தாளில்தான் என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ.1- புகார் மனுவில் என்ன விவரம் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சுருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு
சரியென ஒப்புக்கொண்டார்

ஒம்/வ.அகவிதன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1
ஓசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 127/2022

அ.சா.3

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.சுரேஷ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.யுவராஜ் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 43 |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 05.12.2023**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

**1)** நான் சாம்பல் பள்ளத்தில் இருந்துகொண்டு விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன நாகராஜன் எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 27.01.2021-ம் தேதி சூளகிரி காவல் நிலைய போலீசார் என்னுடன் சேர்ந்து 10 நபர்களையும் அழைத்தார்கள். அழைத்ததின்பேரில் நான் காவல் நிலையம் சென்றேன். ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த ஆவணத்தில் கையொப்பம் இட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். ஆனால் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. **(**மேற்படி பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**)** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி சட்டப்படி **161** குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு எதிராக

சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

கடந்த 25.01.2021-ம் தேதி 17. 00 மணியளவில் சூளகிரி காவல் நிலைய போலீசார் ஓசூர் -கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் மேலுமலை கணவாய் அருகே நடந்த விபத்து வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், அதில் நானும் சாம்ராஜ் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையெழுத்து செய்ததாக  போலீசார் விசாரிக்கும்பொழுது வாக்குமூலம் அளித்துவிட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக மாற்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்ககப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாத காரணத்தினால் அவர்கள் தரப்பு குறுக்கு விசாரணை  முடிக்கப்படுகிறது.</u>

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சுருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு
சரியென ஒப்புக்கொண்டார்

ஒம்/வ.அகவிதன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1
ஓசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 127/2022

அ.சா. **4**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.ராமச்சந்திரன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.சித்தப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 54 |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 05.12.2023**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

1) **நான் சாம்பல் பள்ளத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறன். இந்த வழக்கில் விபத்தில் இறந்துபோன நாகராஜன் என்பவர் எனது உறவினர் ஆவார். ஆஜர் எதிரியைத் எனக்கு தெரியும். கடந்த** 21.01.2021**-ம் தேதி என்னுடைய உறவினர் நாகராஜன் ஆஜர் எதிரியுடன் இருசக்கர வாகனத்தில் சென்றார். ஆஜர் இருசக்கர வாகனத்தை ஓட்ட எனது உறவினர் பின்னால் அமர்ந்து சென்றபோது, மேலுமலை கணவாய் அருகே இரவு** 7 **மணிக்கு விபத்து நடந்து எனது உறவினர் நாகராஜன் மற்றும் வெங்கடேஷ் என்பவரையும் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாக நான் வீட்டில் இருந்தபோது, இரவு** 07.15 **மணிக்கு அ.சா.**1 **கைபேசி மூலம் தகவல் சொன்னார். மேற்படி தகவலின் பேரில் நான் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். நான் பார்த்தபொழுது எனது உறவினர்**

**நாகராஜன் தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டு இருந்தது. ஆஜர் எதிரிக்கு வலது கையில் காயம் ஏற்பட்டிருந்தது. அதன்பிறகு மேல்சிகிச்சைக்காக பெங்களூர் மசூம்தாசா மருத்துவமனையில்சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார்.**

2) அங்கு 21.01.2021-ம் தேதியிலிருந்து 27.01.2021-ம் வரை சிகிச்சையில் இருந்து, பின்பு சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்துவிட்டார். மேற்படி வழக்கு இந்த விபத்து குறித்து சூளகிரி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன்பிறகு இறந்துபோன நபரின் பிரேதத்தை பிரேத பரசோதனை பரிசோதனை செய்வேண்டி ஓசூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டது. அங்கு சூளகிரி காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை மேற்கொண்டார். அதன் பின்னர் பிரேத பரிசோதனை முடித்து அடக்கம் செய்வதற்காக பிரேதத்தை சாம்பல் பள்ளம் எடுத்து செல்லப்பட்டு முறைப்படி அடக்கம் செய்யப்பட்டது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) வழக்கு விபத்து சம்பவத்தினை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தின் போது வழக்கு விபத்து சம்பவத்தில் தொடர்புடைய வாகனத்தினை எதிரி இயக்கினாரா அல்லது எனது கணவர் இயக்கினாரா என்று எனக்கு தெரியாது. ஆகவே யாருடைய அஜாக்கிரதையினால் வழக்கு விபத்து சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரேத விசாரணை தொடர்பாக என்னிடம் ஓசூர் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரணை செய்தார்கள் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு
சரியென ஒப்புக்கொண்டார்

ஓம்/வ.அகவிதன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1
ஓசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்
(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 127/2022

அ.சா.5

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.சித்தராஜ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.சித்தப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 60 |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 05.12.2023**
(எதிரி ஆஜர்)

<u>முதல் விசாரணை :</u>

**1)** நான் சாம்பல் பள்ளத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறன். இந்த வழக்கில் விபத்தில் இறந்துபோன நாகராஜன் என்பவர் எனது உறவினர் ஆவார். ஆஜர் எதிரியைத் எனக்கு தெரியும். கடந்த 21.01.2021-ம் தேதி என்னுடைய உறவினர் நாகராஜன் ஆஜர் எதிரியுடன் இருசக்கர வாகனத்தில் சென்றார். ஆஜர் இருசக்கர வாகனத்தை ஓட்ட எனது உறவினர் பின்னால் அமர்ந்து சென்றபோது, மேலுமலை கணவாய் அருகே இரவு 7 மணிக்கு விபத்து நடந்து எனது உறவினர் நாகராஜன் மற்றும் வெங்கடேஷ் என்பவரையும் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாக நான் வீட்டில் இருந்தபோது, இரவு 07.15 மணிக்கு அ.சா.1 கைபேசி மூலம் தகவல் சொன்னார். மேற்படி தகவலின் பேரில்

நான் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். நான் பார்த்தபொழுது எனது உறவினர் நாகராஜன் தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டு இருந்தது. ஆஜர் எதிரிக்கு வலது கையில் காயம் ஏற்பட்டிருந்தது. அதன்பிறகு மேல்சிகிச்சைக்காக பெங்களூர் மசூம்தாசா மருத்துவமனையில்சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார்.

2) அங்கு 21.01.2021-ம் தேதியிலிருந்து 27.01.2021-ம் வரை சிகிச்சையில் இருந்து, பின்பு சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்துவிட்டார். மேற்படி வழக்கு இந்த விபத்து குறித்து சூளகிரி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன்பிறகு இறந்துபோன நபரின் பிரேதத்தை பிரேத பரசோதனை பரிசோதனை செய்வேண்டி ஓசூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டது. அங்கு சூளகிரி காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை மேற்கொண்டார். அதன் பின்னர் பிரேத பரிசோதனை முடித்து அடக்கம் செய்வதற்காக பிரேதத்தை சாம்பல் பள்ளம் எடுத்து செல்லப்பட்டு முறைப்படி அடக்கம் செய்யப்பட்டது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

1) வழக்கு விபத்து சம்பவத்தினை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தின் போது வழக்கு விபத்து சம்பவத்தில் தொடர்புடைய வாகனத்தினை எதிரி இயக்கிநாரா அல்லது எனது கணவர் இயக்கிநாரா என்று எனக்கு தெரியாது. ஆகவே யாருடைய அஜாக்கிரதையினால் வழக்கு விபத்து சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரேத விசாரணை தொடர்பாக என்னிடம் ஓசூர் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு
சரியென ஒப்புக்கொண்டார்

ஒம்/வ.அகவிதன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1
ஓசூர்.